தினமணி

**திருத்தணியில் திடீர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 01 Jun 2010 09:57:28 AM IST

Last Updated : 01 Jun 2010 02:44:15 PM IST

திருத்தணி, மே 31: திருத்தணியில் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அக்னி வெயில் முடிந்தும் திருத்தணி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 105 டிகிரி வெயிலால் பொதுமக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில் காலை 10 மணி முதல் அனல் காற்றும், கடுமையான வெயிலும் திருத்தணியில் நிலவியது.

அக்னி நட்சத்திரம் முடிந்தும் வெயிலின் தாக்கம் குறையாமல் இருந்ததால் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை பொதுமக்கள் வெளியே வராமல் வீட்டிலேயே இருந்தனர். மாலை 4 மணிக்கு வானத்தில் திடீரென மேகம் இருண்டு குளிர்ந்த காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால், தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சாலைகளில் கழிவுநீருடன் வெள்ளம் ஓடியதால் பொதுமக்கள் நடக்க முடியாமல் கடும் அவதிப்பட்டனர். மழை ஒரு மணி நேரம் நீடித்தது. இந்த திடீர் மழையால், திருத்தணி நகர பொதுமக்கள் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**வரத்து அதிகரிப்பு: பலாப்பழம் விலை வீழ்ச்சி**

First Published : 01 Jun 2010 09:35:16 AM IST

Last Updated : 01 Jun 2010 02:44:07 PM IST

பண்ருட்டி, மே 31: பலாப்பழம் அறுவடை மும்முரம் அடைந்து வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பண்ருட்டி சந்தையில் பலாப்பழம் ஒன்று ரூ.40 முதல் 100 வரை விற்பனையாவதால் விவசாயிகளும், வியாபாரிகளும் வேதனை அடைந்துள்ளனர்.

பலாப்பழம் என்றவுடன் அனைவரின் நினைவுக்கு வருவது பண்ருட்டி. பண்ருட்டி கெடிலம் ஆற்றுக்கு தென்பகுதியில் வளம் நிறைந்த செம்மண் நிலப்பகுதியில் அடர்ந்து வளர்ந்துள்ள முந்திரி காடுகளுக்கு இடையேயும், வீட்டுத் தோட்டத்திலும் பலா மரம் வளர்க்கப்படுகிறது.

இப்பகுதியில் விளையும் பலாப்பழம் மிகுந்த சுவை கொண்டது. இதனால் தமிழகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் பண்ருட்டி பலாப்பழத்தை விரும்பி சாப்பிடுவர், பலாப்பழம் கமிஷன் மண்டி வைத்துள்ள வியாபாரிகள் பலாப்பழத்தை விவசாயிகளிடம் இருந்து பெற்று தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள வியாபாரிகளுக்கு டன் கணக்கில் விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர்.

பருவநிலை மாற்றத்தினால் இம்முறை பலா மரங்கள் காலதாமதமாக காய்ப்பெடுத்தாலும், மகசூல் பாதிக்கப்படவில்லை. தற்போது அறுவடை சீசன் உச்சகட்டத்தில் உள்ளதால் பலாப்பழத்தின் வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகளும், கமிஷன் மண்டி வியாபாரிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

இது குறித்து பண்ருட்டி - கும்பகோணம் சாலையில் பலாப்பழம் கமிஷன் மண்டி வைத்துள்ள பி.ஆர்.மாயவேல் கூறியது:

விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் அறுவடை செய்து கொண்டு வரும் பலாப்பழங்களை பெற்று கமிஷன் அடிப்படையில் விற்று கொடுத்து வருகிறோம். பண்ருட்டியில் இருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், மும்பை, பெங்களூர், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு டன் கணக்கில் அனுப்பி வைக்கிறோம்.

தற்போது அறுவடை சீசன் உச்ச நிலையில் உள்ளதால் பலாப்பழத்தின் வரத்து அதிகரித்துள்ளது. ஒரு சில வாரத்துக்கு முன் ரூ.15 ஆயிரத்துக்கு மேல் விலை போன ஒரு டன் பலாப்பழம் தற்போது ரூ.5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரைதான் விலை போகிறது.

விற்பனைக்காக அனுப்பியது போக எஞ்சிய பழுத்த, அழுகிய பலாப்பழங்களை குப்பையில் கொட்டி வருகிறோம். இதனால் விவசாயிகளும், வியாபாரிகளும் பாதிப்படைந்துள்ளோம் என்றார் அவர்.

**ரேஷன் கடையில் ரூ.40-க்கு துவரம் பருப்பு**

First Published : 02 Jun 2010 08:33:49 AM IST

விழுப்புரம், ஜூன் 1: சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்க ஜூன் மாதத்துக்கு 649 மெட்ரிக் டன் துவரம் பருப்பு விழுப்புரம் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

÷எனவே பொதுமக்கள் நியாய விலைக் கடையில் ரூ.40 விலையில் ஒரு கிலோ துவரம் பருப்பு பெற்றுக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 66.87 அடி**

First Published : 02 Jun 2010 09:11:51 AM IST

ஈரோடு, ஜூன் 1: பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 66.87 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 289 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.

**எருமாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கூட்டம்**

First Published : 02 Jun 2010 09:18:47 AM IST

கூடலூர், ஜூன் 1: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எருமாடு விவசாயிகள் நல சங்கம் சார்பில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

தரமான பசுந்தேயிலைக்கு நியாயமான விலை வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும். எல்லா காலங்களிலும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்ய வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பல ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கும் வருடாந்திர பொது சபையை உடனே கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கைகளை தீர்க்க மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் உட்பட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கூட்டத்திற்கு சங்க தலைவர் தாமஸ் தலைமை வகித்தார்.

இணைச் செயலாளர் சிரியாக் மாஸ்டர் முன்னிலை வகித்தார். அமைப்பாளர் பேபி, அப்துல் ரகுமான், பி.வீ.வர்கீஸ், லில்லி ஏலியாஸ், அனீஸ் தாமஸ், சட்ட ஆலோசகர் ஐசக் ஜான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மதுரை மல்லிக்கு மவுசு!**

First Published : 02 Jun 2010 03:41:27 AM IST



காரியாபட்டி  : மதுரை மல்லிகைக்கு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காரியாபட்டி பகுதியில் குண்டு மல்லிகைக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காரியாபட்டி மற்றும் வலையங்குளம், பாரைப்பத்தி, இலுப்பைக்குளம், வெள்ளாகுளம், சுந்தரங்குண்டு பகுதியில் அதிக அளவில் குண்டு மல்லிகை பயிரிடப்பட்டுள்ளது. இதற்கான பதியங்கள் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், தங்கச்சிமடம் பகுதியிலிருந்து வாங்கப்படுகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் இங்கிருந்துதான் பதியங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஏக்கருக்கு 4 ஆயிரம் பதியங்கள் நடுகின்றனர். நல்ல இயற்கை உரங்கள் இட்டு வந்தால், 25 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். செயற்கை உரங்கள் இட்டால் 10 ஆண்டுகளுக்குதான் பலன் கிடைக்கும். கோடை காலம்தான் மல்லிகை பூக்களுக்கான சீசன். ஆகஸ்ட் வரை நல்ல விளைச்சல் இருக்கும். வறண்ட பூமியிலும் மல்லிகை பயிரிட்டால் விளைச்சல் அமோகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மாவட்டங்கள்தான் மல்லிகை பயிரிடுவதற்கு ஏற்ற  சிறந்த பகுதிகளாக உள்ளன. முன்பு ஆயிரக்கணக்கான ஏக்கரில் மல்லிகைச் செடிகள் பயிரிட்டனர். காலப் போக்கில் மழை அளவு குறைந்து நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதால், பூ விவசாயம் பாதிக்கப்பட்டது. பூப் பறிக்க ஆள்கள் பற்றாக்குறையும் ஒரு காரணம்.

இங்கு விளையும் மல்லிகைப் பூக்கள் அதிகாலையில் பறிக்கப்பட்டு, விமானம் மூலம் மும்பை, தில்லிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கும் மதுரை குண்டு மல்லிகளுக்கு நல்ல கிராக்கி உள்ளதால், நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. விவசாயம் அதிக அளவு இல்லாததால், மதுரை மார்க்கெட்டுக்கு குண்டு மல்லி வரத்து குறைந்து காணப்படுகிறது.

இருப்பினும், அதிக விசேஷ நாட்கள் உள்ளதால், கிலோ 150 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதிக விளைச்சல் உள்ள நேரத்தில் இங்குள்ள சென்ட் கம்பெனிகள் விலைக்கு வாங்கி ஆயில் தயார் செய்து பிரான்ஸ் சந்தைக்கு அனுப்பி வைக்கின்றன. அங்கு இந்த குண்டு மல்லிகளில் தயார் செய்த ஆயிலுக்கு கிராக்கி இருந்து வருகிறது.

இதனால், பூக்களைப் போல, விவசாயிகளின் முகமும் மலர்ந்துள்ளது.

இதுகுறித்து விவசாயி ஜெயப்பிரகாஷ் கூறியதாவது:

எந்த மண்ணுக்கும் ஏற்ற ஒரே விவசாயம் மல்லிகைதான். குறைந்த அளவு தண்ணீரில் நல்ல விளைச்சல் காணலாம். ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால் போதும். மாதம் 20 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம். வேலை ஆள்கள் தேவையில்லை. இப் பகுதியில் விளையும் மல்லிகள் தற்போது உள்ளூர் மார்க்கெட்டை நம்பி உள்ளன.

மதுரை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகச் செயல்படத் துவங்கினால், வெளிநாடுகளுக்கு விவசாயிகள் நேரிடையாக அனுப்ப முடியும். அவ்வாறு அனுப்பும்பட்சத்தில் அன்னியச் செலாவணி கிடைப்பதுடன், நல்ல வருவாய் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மல்லிகைக்கு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும். மாவட்டத்தில் மல்லிகை வளர்ச்சி கழகம் தொடங்க வேண்டும். மல்லிகை விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

தினமலர்

**வாழை சேதம்: விவசாயிகள் கவலை**

விருத்தாசலம் : விஜயமாநகரம் கிராமத்தில் வீசிய சூறாவளி காற்றில் 30 ஏக்கர் வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.விருத்தாசலம் பகுதிகளில் கடந்த 30ம் தேதி மாலை 5 மணிக்கு பலத்த சூறாவளிக் காற்றுடன் கன மழை பெய்தது. இதில் விஜயமாநகரத்தில் மரங் கள், மின் கம்பங்கள் முறிந்து விழுந்தன. மேலும் விவசாயிகள் பயிரிட்டிருந்த 30 ஏக்கர் வாழை மரங்களும் காற் றில் சாய்ந்தன. வாழைத் தார்கள் விட்டு அறுவடைக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கும் நிலையில் மரங்கள் விழுந்ததால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுத்தியதுடன் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

**போக்குவரத்து குறைதீர்கூட்டம் விவசாயிகள் பங்கேற்க அழைப்பு**

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கான போக்குவரத்து குறைதீர்க்கும் கூட்டம் நாளை ஜூன் 3ம் தேதி நடக்கிறது' என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிக்களுக்கான போக்குவரத்து துறை சம்பந்தமான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை ஜூன் 3ம் தேதி மாலை 3 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் போக்குவரத்து துறை சம்பந்தமான விவசாயிகளின் கோரிக்கைகள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**பண்ருட்டி மார்க்கெட் கமிட்டியில் நெல், எள் வரத்து அதிகரிப்பு**

பண்ருட்டி : பண்ருட்டி பகுதியில் நெல் அறுவடை சீசன் என்பதால் மார்க்கெட் கமிட்டியில் கடந்த வாரத்தை விட நெல், எள் வரத்து அதிகரித்தது.பண்ருட்டி மார்க்கெட் கமிட்டியில் நெல் மூட்டைகள் கடந்த வாரம் ஏ.டி.டி.,36 ரகம் தினமும் 500 மூட்டைகள் அளவிலும், 50 மூட்டை அளவிலும் விற்பனைக்கு வந்தது. நேற்று முன்தினம் ஏ.டி.டி., 36 ரகம் 1,200 மூட்டைகளும், எள் 100 மூட்டைகளும் வரத்து வந்தது. நேற்று 500 மூட்டைகளும், எள் 50 மூட்டைகளும், உளுந்து 40 மூட்டைகளும், ராகி 20 மூட்டைகளும், மணிலா 20 மூட்டைகளும், திணை, கம்பு ஆகியவை விற்பனைக்கு வந்தது.75 கிலோ எடைகொண்ட நெல் மூட்டை 726 ரூபாயும், 80 கிலோ எள் மூட்டை 3,209 ரூபாயும், பருத்தி 100 கிலோ 3,050 ரூபாயும், 100 கிலோ உளுந்து 5,949 ரூபாயும், கம்பு 1,431 ரூபாயும், ராகி 1,183 ரூபாயும், தினை 1,679 ரூபாயும் விற்பனையானது. நெல் அறுவடை சீசன் என்பதால் இன்னும் 20 நாட்கள் நெல் வரத்து அதிகரித்து காணப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**வனப்பகுதியில் மண்வளம் இல்லாததால் முந்திரிசாகுபடி சோதனையில் பின்னடைவு**

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதி வனப் பகுதியில் சோதனை முயற்சியாக மேற்கொண்ட முந்திரி சாகுபடி, மண்வளம் இல்லாததால் எதிர் பார்த்த மகசூல் கிடைக்கவில்லை. வனத் துறையினரின் இம்முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டதால் தொடர்ந்து யூகலிப்டஸ் மரங்களை வளர்க்க முடிவு செய்துள்ளனர்.தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள இயற்கை காடுகள் அழிக்கப்பட்டு சமூக காடுகள் வளர்ப்பு திட்டம் என்ற பெயரில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்த்து பேப்பர் உற்பத்திக்கு வெட்டி அனுப்பப் படுகின்றன. ஆயிரக்கணக்கான பரப்பில் பயிரிடப்பட்டுள்ள மரங்களால் இந்த பகுதி மக்களுக்கு கன்று நடும் தருணங்கள் தவிர்த்து மற்ற நாட்களில் எந்த வேலை வாய்ப்பும் கிடைப்பதில்லை.செம்மண் வளம் நிறைந்த தியாகதுருகம் பகுதி வனங்களில் முந்திரி சாகுபடி கூடுதல் விளைச் சலை தருமா என்ற நோக்கில் வனத்துறையினர் சோதனை முயற்சி மேற்கொண்டனர்.

கடந்த 2000ம் ஆண்டு ஆழ்வார்மலை வனப்பகுதியில் 50 ஏக்கர் பரப்பில் முந்திரி கன்றுகளை நட்டு பராமரித்து வந்தனர். பண்ருட்டி, உளுந்தூர் பேட்டை பகுதியில் உள்ள முந்திரி மரங்களின் வளர்ச்சிபோல் அல்லாமல் மிக குறைவான வளர்ச்சி விகிதத்தில் கன்றுகள் வளர்ந்தன. ஐந்து ஆண்டுகளில் பூக்கத் தொடங்கி பலன் தரும் முந்தி ரி மரங்கள், ஆழ்வார்மலைப் பகுதியில் எதிர்பார்த்த வகையில் வளர்ச்சி இல்லாததால் மகசூல் பாதித்தது. கடந்த 3 ஆண்டுகளாக மரங்களில் இருந்த சில பழங்கள் பழுக்கத் தொடங்கின.இந்த ஆண்டு அதிகளவு பூத்தும், போதிய சத்து இல்லாமல் பூக்கள் கருகி கீழே விழுந்து விடுகின்றன. மரத்திற்கு 10 பழங்கள் என்ற

விகிதத்தில் மகசூல் பெருமளவு பாதித்துள்ளது. பூவிலிருந்து உருவாகும் பழங்கள் பூச்சித் தாக்குதல் காரணமாக கொட்டைகளின் வளர்ச்சி குறைவாகவே உள்ளது.கடந்த 3 ஆண்டுகளாக தனியார் ஒருவர் டெண்டர் எடுத்து முந்திரி மகசூலை அறுவடை செய்ததில் பெருத்த நஷ்டமே ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ரேஞ்சர் செல்வராஜ் கூறுகையில், பண்ருட்டி பகுதியில் உள்ள மண்ணில் கனிமச் சத்துக்கள் அதிகம் காணப்படுகிறது. இதனால் முந்திரி மரங்கள் செழித்து வளர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் மகசூல் கொடுக் கிறது. இப்பகுதியில் முந்திரி மரங் களின் வளர்ச்சி குறித்து சோதனை முயற்சி செய்யப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இப்பகுதிக்கு யூகலிப் டஸ் மரங்கள் வளரும் சூழலே சாதகமாக உள்ளது என்றார்.தியாகதுருகம், ரிஷிவந்தியம் வனப்பகுதியில் முந்திரி மரங்கள் வளரும் சூழலும், மண் வளமும் நிறைந்திருந்தால் இப்பகுதி மக்களின் வருவாய் அதிகரிக்க வாய்ப் புள்ளது. தற்போதைய முந்திரி சாகுபடி சோதனை முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டதால் அப்பகுதியில் யூகலிப்டஸ் மரங் களை வளர்க்க வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

**மானிய விலையில் நுண்ணூட்ட உரம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் கூகலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நுண்ணூட்டத்தை அதிகரிக்கும் வகையில் துத்தநாக சல்பேட் உரம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு முதல்போக பாசனத்துக்கு கடந்த 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. நெல் நாற்று நடுதல் மற்றும் மஞ்சள் பயிரிடும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மகசூலை பெருக்கவும், நெல் நாற்று நன்கு வளரவும் துத்தநாத சல்பேட் இட வேண்டும். விவசாயிகள் வசதிக்காக கோபி மற்றும் கூகலூர் வேளாண் விரிவாக்க மையங்களில் இரண்டரை டன் துத்தநாக சல்பேட் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ துத்த நாத சல்பேட் 18 ரூபாய்க்கு மான்ய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. "வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் துத்தநாக சல்பேட்டை விவசாயிகள், மான்ய விலையில் வாங்கி பயன்படுத்தி கொள்ள வேண்டும்' என விவசாயத் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**தேயிலை செடியை பாதுகாக்க கவாத்து**

மஞ்சூர் : நோய் தாக்குலில் இருந்து தேயிலை செடிகளை பாதுகாத்து கொள்ள, கவாத்து செய்யப்பட்டு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை தொழில் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையிலும் போதுமான மழை பெய்யாததால் தேயிலை செடிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.தேயிலை

செடிகளை சிவப்பு சிலந்து உள்ளிட்ட பல்வேறு நோய்கள் தாக்கப்பட்டுள்ளன. இதனால் தேயிலை தோட்டங்களில் மகசூல் வெகுவாக குறைந்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்யாததால் மேலும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டதால், சில பகுதிகளில் விவசாயிகள் தேயிலை செடிகளை கவாத்து செய்து மருந்து தெளித்து செடிகளை பாதுகாத்து வருகின்றனர்.

**அறிமுகம் தென்னையை காப்பாற்ற காப்பீடு திட்டம்: பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்**

குஜிலியம்பாறை: தென்னை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், நடப்பு ஆண்டு முதல் அரசு மானியத்துடன் கூடிய "தென்னை காப்பீட்டு திட்டம்' துவக்கப்பட்டுள்ளது. வறட்சி, புயல், வெள்ளம், நோய் தாக்குதல் போன்றவைகளால் தென்னை மரங்கள் அழிந்து வருகிறது. தென்னை விவசாயத்தின் மீது விவசாயிகள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். திண்டுக்கல் உள்ளிட்ட தென் மாவட்டங்களில், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கடும் வறட்சியால் தென்னை மரங்கள் அழிந்தன. அரசு குறிப்பிட்ட அளவு நஷ்ட ஈடு கொடுத்த போதும், அது அனைவரையும் சென்றடையவில்லை.

இக்குறையை போக்கி, விவசாயிகளை பாதுகாப்பது மட்டுமின்றி தென்னைவிவசாயத்தை ஊக்குவிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த வகையில் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் கூடிய "தென்னை காப்பீட்டு திட்டம்', நடப்பு பருவம் முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், இயற்கை சீற்றங்களால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட உள்ளன. தென்னை சாகுபடி செய்யும், ஒவ்வொரு தனி நபரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். குறைந்தது பத்து மரம் முதல் எவ்வளவு வேண்டுமானாலும் காப்பீடு செய்யலாம்.

நான்கு வயது முதல் 15 வயது வரையுள்ள மரங்களுக்கு, ஆண்டுக்கு ஒரு ரூபாய் 17 பைசாவும், 16-60 வயதுள்ள மரங்களுக்கு, ஆண்டுக்கு ஒரு ரூபாய் 63 பைசாவும் பிரிமியம் செலுத்தவேண்டும். பதிவு முறை; விவசாயிகள் தங்களது தென்னை சாகுபடி ஆதாரத்துடன், அருகில் உள்ள வேளாண் அலுவலகத்திற்கு சென்று, பிரிமியம் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டால், 15 வயதுள்ள மரங்களுக்கு தலா 600 ரூபாயும், 16-60 வயதுள்ள மரங்களுக்கு ஆயிரத்து 150 ரூபாயும் இழப்பீடு பெறலாம். மேலும் விபரங்களுக்கு அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் அலுவலகங்களை தொடர்பு கொள்ளுமாறு, குஜிலியம்பாறை உதவி இயக்குநர் ரவிபாரதி தெரிவித்துள்ளார்.

**வரத்து குறைவு: கடலை எண்ணெய் விலை அதிகரிப்பு**

மதுரை: நிலக்கடலை தட்டுப்பாடு காரணமாக, மதுரையில் இரு வாரங்களாக கடலை எண்ணெய் விலை அதிகரித்தது.எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:கடந்த வாரம் 1100 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் கடலை எண்ணெய் நேற்று 1140 ரூபாய்க்கும், சூரியகாந்தி எண்ணெய் 780 ரூபாயிலிருந்து 800 ரூபாய்க்கும் விற்கப் பட்டது. நல்லெண்ணெய் 1250 ரூபாயிலிருந்து 1180 ரூபாய்க்கும், தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாயிலிருந்து 1600 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. ரைஸ்பிரான் ஆயில் 650ரூபாயில் இருந்து 655 ரூபாய்க் கும், பாமாயில் 665 ரூபாயில் இருந்து 660 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வனஸ்பதி 730 ரூபாய், தேங்காய் எண்ணெய் 950 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**கார் சாகுபடிக்காக காரையார் அணை திறப்பு**

விக்கிரமசிங்கபுரம்: கார் சாகுபடி பாசனத்திற்காக காரையார் அணையிலிருந்து நேற்று 500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையிலிருந்து தண்ணீரை தாமிரபரணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் நாகராஜன் திறந்து வைத்தார்.நெல்லை கோட்டத்தில் கார் சாகுபடிக்காக ஆண்டுதோறும் ஜூன் மாதம் காரையார் அணை திறப்பது வழக்கம். இந்த ஆண்டு கார் சாகுபடி பாசனத்திற்காக நேற்று காரையார் அணை திறக்கப்பட்டது. அணையிலிருந்து தண்ணீரை தாமிரபரணி வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் நாகராஜன் திறந்து வைத்தார். முன்னதாக விவசாயிகள் சார்பில் தாமிரபரணி நதிக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். சாகுபடி பாசனத்திற்காக நேற்று 58.07 கனடி நீர் அளவு தண்ணீர் இருந்ததில் இருந்து 500 கனஅடி நீர் திறந்து விடப்பட்டது.

**தூத்துக்குடி காய்கறி மார்க்கெட்டில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு**

தூத்துக்குடி,: -தொடர் முகூர்த்தம், விளைச்சல் குறைவு போன்ற காரணங்களால் கடந்த சில நாட்களாக தூத்துக்குடி காய்கறி மார்க்கெட்டில் காய்கறி விலை ஜெட்வேகத்தில் ஏறிக் கொண்டிருக்கிறது. வைகாசி மாதம் தொடங்கியதில் இருந்து தொடர்ச்சியாக முகூர்த்த நாட்களும், பல இடங்களில் கோவில் திருவிழாக்களும் நடந்து வருகிறது. இதன் காரணமாக பூக்கள், காய்கறிகள் போன்றவற்றின் விலை வேகமாக உயர்ந்து வருகிறது. தூத்துக்குடி காமராஜர் மார்க்கெட்டில் மொத்த விலைக்கும், வஉசி மார்க்கெட்டில் சில்லரை விற்பனையும் நடந்து வருகிறது. இந்த மார்க்கெட்டுகளுக்கு தூத்துக்குடியை ஒட்டியுள்ள சில கிராமபுரங்களில் இருந்து சில காய்கறி வகைகளும், மதுரை போன்ற வெளிமாவட்டங்களில் இருந்து இங்கிலீஸ் காய்கறி வகைகளும் வருகின்றது.பல இடங்களில் கடும் கோடை வெயில் காரணமாக மானாவாரி நிலங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த காய்கறி செடிகள் அழிந்து விட்டது.கிணற்று பாசனம் மூலம் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் மட்டுமே விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம்

வரையிலும் மூன்று கிலோ தக்காளி தூத்துக்குடியில் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்றைய நிலவரப்படி தூத்துக்குடி வஉசி., காய்கறி மார்க்கெட்டில் தக்காளி கிலோ ஒன்றிக்கு ரூ.40க்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல் கத்தரிகாய்-25, பல்லாரி-15, வெங்காயம்-25, சோயாபீன்ஸ்-70, இஞ்சி-50, முருங்கைக்காய்-25, பீன்ஸ்-50, சவ்சவ்-30, பாவக்காய்-30, உருளைக்கிழங்கு-20, முட்டைகோஸ்-15, சேனைக்கிழங்கு-30, மாங்காய்-25, புடலைங்காய்-20, முள்ளங்கி-20, மிளகாய்-30, சுரைக்காய்-8, கொத்தமல்லி-150, வெண்டைக்காய்-20, கேரட்-50, பீட்ரூட்-30, எழுமிச்சை-60க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த விலை உயர்வு இன்னும் அதிகரிக்க கூடும் என்றும் மார்க்கெட் வியாபாரிகள் தெரிவித்தனர்.

---

**மதுரை பகுதியில் பெரியார் வைகை பாசனத்தில் முதல் பயிர் சாகுபடிக்கு மங்களகரமான துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2010,00:00 IST




மதுரை பகுதியில் 1 லட்சத்து 45 ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதல் பயிர் சாகுபடி மங்களகரமாக துவங்கிவிட்டது. இதற்கு முக்கிய காரணம் சோழவந்தான், நாச்சியாபுரம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, திருப்புவனம், வத்திராயிருப்பு போன்ற பகுதிகளில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நல்ல முறையில் கோடை மழை பெய்துள்ளது. இதோடு வானிலை ஆய்வாளர்கள் இந்த வருடம் தென்மேற்கு பருவமழை நன்றாக இருக்கும் என்று கூறிஉள்ளனர். சமீபத்தில் ""லைலா'' புயலால் தமிழக கடற்கரை பகுதியிலும், உள்நாட்டிலும் தேவையான மழையினை அளித்துள்ளது. இதனால் கிணறுகளிலும் நல்ல ஊற்று ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பிடித்த இம்மாதிரியான சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளதால் மதுரை விவசாயிகள் இன்று என்றுமில்லாத அளவு நெல் சாகுபடியில் நம்பிக்கையைக் கொண்டுள்ளனர்.

இந்த ஒரு சுமூக நிலையைக்கண்ட அரசு விவசாயிகளுக்கு பல வழிகளில் உதவிசெய்ய முன்வந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

மதுரை வேளாண் கோட்ட உதவி இயக்குனர் அலுவலகம் குறுகிய கால நெல் ரகங்களான ஆடுதுறை 43, ஆடுதுறை 45 நெல் ரக விதைகளை விவசாயிகளுக்கு மானியத்துடன் வழங்கி வருகின்றது. இதோடு மட்டுமல்ல. அதிகாரிகள் மேற்கண்ட ரகங்களை செம்மைநெல் சாகுபடி முறையிலும் நல்ல முறையில் செய்ய விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். நெல் பயிரின் மகசூல் திறனை எக்டேருக்கு எட்டு டன்களாக கூட்டவேண்டும் எனில் அதற்குரிய ஒரே வழிமுறை செம்மைநெல் சாகுபடிதான். தமிழகத்தில் நிலவிவரும் பாசனநீர் பற்றாக்குறை, உரப்பற்றாக்குறை, வேலையாட்கள் பற்றாக்குறை, சாகுபடிக்கு மிக அதிகமான செலவு போன்ற பிரச்னைகளிலிருந்து விடுபட செம்மைநெல் சாகுபடி விவசாயிகளுக்கு கிடைத்திருக்கும் புரட்சிகர சாகுபடி முறையாகும்.

விவசாயிகள் சாகுபடிக்கு ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் காலத்தை வென்ற 100நாள் ரகமான ஜே-13 இவைகளை சாகுபடி செய்யலாம். ஆடுதுறை 43 ரகத்தை விவசாயிகள் செல்லப்பொன்னி என்று சொல்கிறார்கள். இதன் சாகுபடியில் நல்ல லாபம் கிட்டுகின்றது. விவசாயிகள் பாடுபட்டு உழைத்தால் ஏக்கரில் 30 மூடை மகசூல் எடுக்க முடியும். அறுவடை சமயம் நெல்லை விற்பனை செய்தால் விலை மூடைக்கு ரூ.400/- வரை கிடைக்கும். வைத்திருந்து விற்றால் அதிகமான விலை கிடைக்கும். விவசாயிகளுக்கு 30 மூடை மகசூல் கிடைத்தால் சாகுபடி செலவு போக நிகர வருமானம் ரூ.4,250/- வரை கிடைக்கும்.

ஆடுதுறை 45 ரக நெல் தமிழகத்தில் பல பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்றது. குறிப்பாக இந்த ரகம் வெண் புழுங்கல் தயார் செய்வதற்காகவே சாகுபடி செய்யப் படுகின்றது. அரிசி பார்ப்பதற்கு மிக நன்றாக உள்ளது. இந்த அரிசி மற்ற ரகங்களின் புழுங்கல் அரிசியை விட அதிக விலைக்குப் போகின்றது. செங்கல்பட்டில் ஒரு விவசாயி ஆடுதுறை 45 நெல் சாகுபடியில் ஏக்கரில் 75 கிலோ மூடை 25 மகசூலாகப் பெற்றார். இவர் செய்த சாகுபடி செலவு ரூ.8000/-.

இந்த விவசாயி தனது அறுவடையை நெல்லாக விற்க முயன்றபோது அதற்கு கிடைக்க இருந்த விலை மூடைக்கு (75 கிலோ) ரூ.450/-தான். இவர் நெல்லாக விற்காமல் நெல்லை வெண்புழுங்கல் அரிசியாக செய்தார். இவருக்கு ஏக்கரில் 1,025 கிலோ அரிசி கிடைத்தது. இதை கிலோ ரூ.15/-க்கு விற்று வருவாய் ரூ.15,375/- பெற்றார். இதனால் இவருக்கு நெல் சாகுபடியில் ஏக்கரில் ரூ.6,350/- லாபம் கிடைத்தது. இந்த லாபம் நெல்லாக விற்பதை விட சுமார் இரு மடங்காகும். ஆடுதுறை 45 ரகத்தில் குலைநோய் வராமல் தடுப்பது மிகவும் சுலபம். இதற்கு சூடோமோனாஸ்

உபயோகிக்கலாம். ஆடுதுறை 43, ஆடுதுறை 45 இவைகளோடு குறுகிய கால நெல் ரகமான ஜே-13 ரகத்தையும் (100 நாள்) விவசாயிகள் சாகுபடி செய்யலாம். ஜே-13 நெல்லினை இட்லி செய்ய உபயோகிக்கலாம்.

இதில் நல்ல மாவு காணுகின்றது. மேலும் ஜே-13 நெல்லை பொரி செய்வதற்கும் உபயோகிக்கலாம். கடும் வறட்சி சூழ்நிலையிலும் நல்ல மகசூலினைத் தருகின்றது. இதன் வயது 100 நாட்களாக இருப்பதால் வறட்சியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் குணமும் இதற்குண்டு. ஜே13 நெல்லின் சிறப்பினை மதுரை விவசாயிகள் நன்கு அறிவார்கள். விவசாயிகள் அரும்பாடுபட்டு நல்ல மகசூலும் கணிசமான லாபமும் எடுக்க வேண்டும்.
-எஸ்.எஸ்.நாகராஜன்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2010,00:00 IST



ஹைபிரிடு மிளகாய் - வொண்டர் ஹாட்: புதிய ஒட்டு ரகம். மான்சாண்டோ ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் முன்னதாக செமினிஸ் என்று அழைக்கப்பட்ட நிறுவனத்தின் அறிமுகம். அதிக காரமும் அடர் கருப்பு நிறமும் உள்ள மிளகாய். விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. திருச்சி-மதுரை மெயின்ரோட்டில் நடுவில் உள்ள துவரங் குறிச்சி, அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் பச்சைமிளகாய் சாகுபடி கொடிகட்டிப் பறக்கிறது. இந்த புதிய ஹைபிரிட் மிளகாய் உயர் விளைச்சல் தருவதோடு வைரஸ் தாக்குதல் இல்லை என்று கூறுகிறார் அனுபவ விவசாயி பொ.மாழயகன், த/பெ.பொன்னன், நல்லபிச்சாம்பட்டி, செந்துறை, 97514

72902. மேலும் விபரங்களுக்கு மணிவேல், திருச்சி, 98651 10198.

ஹைபிரிடு தக்காளி - ரெட் ரூபி: ஈஸ்ட் வெஸ்ட் சீட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் வழங்கும் இதன் சிறப்பு அதிக மகசூல், மழையைத் தாங்கி மகசூல் கொடுக்கக் கூடியது. ரெட் ரூபி தக்காளி வியாபாரிகள் விரும்பும் தரம். மத்தியமான எடை, வெயில் மழையைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. அனுபவ விவசாயி சிவகுமார், த/பெ.முனிராஜ், சாஸ்திரமுட்லு, கண்டியனஹல்லி (அஞ்சல்), பாலக்கோடு தாலுகா, தர்மபுரி-636 806. 90254 28370.

மோட்டோ கார்ட்-250 என்கிற இந்த உபகரணம் நவீன விவசாயத்தில் அறுவடையைச் சேகரித்து சுமந்துவர பாக்குத்தோப்புகளில், தென்னந் தோப்புகளில், பழத்தோட்டங்களில் பெரிதும் பயன்படக்கூடியது. ஹெக்டே அக்ரோ இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹெக்டேபார்க், பீ.கே.ரோடு, சாகர்-577 401, ஷிமோகா மாவட்டம், கர்நாடகா தயாரித்து வினியோகிக்கிறது. 132 கிலோ எடையுள்ள இந்த உபகரணத்திற்கு அரசு மானியம் உண்டு. 50 ஆயிரம் ரூபாய் அரசு மானியம் போக, 50 ஆயிரம் ரூபாய்க்கு இதை வாங்கினால் நாமே கூட ஆள் இல்லாத சமயங்களில் இயக்கலாம். பெட்ரோலில் இயங்கக்கூடிய இந்த இயந்திரம் 4.3 குதிரை சக்தியுடன் இயங்குகிறது.

இந்த உபகரணத்தின் மூலம் 252 கிலோ எடையுள்ள மகசூலைப் புலம் பெயர வைக்கலாம். டிப்பர் மாதிரி கவிழ்த்து கொட்டச் செய்யலாம். மேலும் விபரங்களுக்கு: கன்னடம் / ஆங்கிலத்தில் பேச- 96634 33808; தமிழில் பேச - 93644 64433.
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 02,2010,00:00 IST



பாத்திமுறை பாசனத்தில் நெல் சாகுபடி செய்து சாதனை புரிந்து வருகிறார் திண்டுக்கல் மாவட்டம் தருமத்துப்பட்டியைச் சேர்ந்த விவசாயி குழந்தைவேல்.
விவசாயச் சுற்றுலாவிற்காக பூனே சென்றிருந்தபோது நாம் காய்கறி சாகுபடி செய்வதுபோல்நெல் சாகுபடி செய்திருப்பதைப் பார்க்க நேரிட்டது. ஊர் திரும்பியதும் 70 சென்ட் நிலத்தில் கோ.39 சன்ன ரக நெல்லை அதே மாதிரி இயற்கை முறையில் சாகுபடி செய்து ஏக்கருக்கு 2100 கிலோ நெல் எடுத்துள்ளார்.

சாகுபடி நிலத்துக்கு அருகில் நாற்றங்கால் இருப்பது அவசியம். வழக்கமான முறையில் நாற்றங்கால் அமைத்து ஏக்கருக்கு 5 கிலோ விதைநெல்லை தூவிவிட வேண்டும். தண்ணீர் தெளிக்கும்போது அதில் பஞ்சகவ்யாவையும் கலந்து தெளித்தால் நாற்றின் வளர்ச்சி அபாரமாக இருக்கும். 15 நாள் வயதுடைய நாற்றை மண்வெட்டியால் கேக் மாதிரி வெட்டி எடுத்து நடவு செய்ய வேண்டும்.

ஈர நடவு: நாற்று தயாராகும்போதே நடவுக்கான நிலத்தை ரோட்டோவேட்டர் இயந்திரத்தைப் பயன்படுத்தி 2 உழவு செய்து புழுதியாக்கி 10 அடி து 10 அடி அளவில் பாத்தி எடுத்து அதில் ஈர நடவாக நாற்றை நடவுசெய்யவேண்டும். அதாவது கேழ்வரகு, மிளகாய், வெங்காயம் நடவுசெய்யும் அதே முறையில் ஒவ்வொரு நாற்றாக முக்கால் அடி இடைவெளியில் நடவுசெய்ய வேண்டும்.

எட்டு நாளைக்கு ஒரு தண்ணீர்: நடவு முடிந்ததும் அடுத்தநாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அடுத்ததாக 8 நாளைக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சினால் போதும். கதிர் பிடித்த பிறகு வெயில் அதிகமாக இருந்தால் 3 நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொருமுறை நீர்

பாய்ச்சும்போதும் பாசன நீரில் ஏக்கருக்கு 500 லிட்டர் அமுதக்கரைசலை கலந்து விட்டுக்கொண்டே வந்தால் நிலம் வளமாகும். நடவிலிருந்து 15 நாள் இடைவெளியில் ஒரு டேங்கருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா, 100 மில்லி மீன் அமினோ அமிலம், 100 மில்லி வேப்பங்கொட்டைக்கரைசல் ஆகிய மூன்றையும் நன்றாக கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 10 டேங்க் தேவைப்படும். நடவு செய்த 20, 40, 60ம் நாட்களில் கைக்கொத்து கொண்டு களை எடுக்க வேண்டும்.

கதிர் வைக்கும்போது பச்சிலைப்பூச்சி தாக்குதல் கொஞ்சம் இருக்கும். டேங்குக்கு 500 மில்லி அக்னி அஸ்திரம் தெளித்து கட்டுப்படுத்தலாம். வெப்பம் அதிகமாக இருப்பதால் பூச்சி, நோய்கள் வராது. வயலில் ஆங்காங்கே பறவைகள் அமர்வதற்காக குச்சிகள் நட்டுவைத்துவிட்டால் பூச்சிகளைப் பறவைகளே பார்த்துக்கொள்ளும். அடுத்து அறுவடைதான்.
தொடர்புக்கு குழந்தைவேல், 98436 56904. (தகவல்: பசுமைவிகடன், 25.5.10)

செலவு விபரம் (70 சென்ட்க்கு) ரூ.
உழவு 1000
பார் 600
விதை 90
நடவு 1000
இடுபொருள் தயாரிப்பு/தெளிப்பு 800
களை 1000
அறுவடை 2000
மொத்தம் 8490
மகசூல்-1500 கிலோ x 11 ரூ.
வரவு 16,500
நிகர லாபம் 10,010